**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

**OS. No.147/2019 நாள்.04.07.2025**

DW1- **திரு. வில்சன் த /பெ. திரு. மரியல்அரசு**

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வேலை பார்க்கிறேன் என்ன வருமானம் என்றால் சுயதொழில் கம்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன். எவ்வளவு வருமானம் வரும் என்றால் மாதம் 6000, 7000 வரும். கம்யூட்டர் சென்டர் எந்த தேதியிலிருந்து வைத்துள்ளேன் என்றால் 2007 முதல் வைத்துள்ளேன். அதற்கு முன்பு ஏதாவது வேலை பார்த்தேன் என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்தேன். எந்த நாட்டில் எந்த காலகட்டத்தில் வேலை பார்த்தேன் என்றால் சார்ஜா நாட்டில் 1990 முதல் பிப்ரவரி 1995 வரை வேலை பார்த்தேன் இடையில் 1995 பிப்ரவரி 1996 டிசம்பர் வரை இந்தியாவில் இருந்தேன், அதன் பிறகு 2007 வரை வெளிநாட்டில் இருந்தேன். மேற்படி சொன்னதை நிரூபிக்க ஆவணம் உள்ளதா என்றால் பாஸ்போர்ட் உள்ளது. அங்கு என்ன வேலை பார்த்தேன் என்ன சம்பளம் என்றால் ஆரம்பத்தில் செக்யூரிட்டி வேலை பார்த்தேன் 1996 முதல் 2007 வரை கிளர்க் வேலை பார்த்தேன். என் சகோதரி பாக வழக்கு சொத்து என் அம்மா வாங்கிய சொத்து என்றால் அப்பா சம்பாதித்து அம்மா பெயரில் வாங்கினார். பிளாட்டாக அம்மா வாங்கி அதில் அம்மா வீடு கட்டினார் என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான பத்திரம், பட்டா வீட்டுவரி எல்லாம் அம்மா பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். அப்பா வாங்கினார் என்பதை காண்பிக்க என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் ஏதும் இல்லை. வழககு சொத்து அம்மா சொத்தா அப்பா சொத்தா என்றால் அம்மா சொத்து. அம்மா யாருக்கும் எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் எழுதி வைக்கவில்லை. அம்மா சொத்தில் உடன் பிறந்தவருக்கு பங்கு உண்டா என்றால் தங்கைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்துவிட்டேன் தம்பியையும் படிக்க வைத்தேன். அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை செய்ததால் அந்த சொத்தை எனக்கு ஒப்படைத்துவிட்டார். எந்த கடமையும் நான் யாருக்கும் செய்யவில்லை என்றும் நானே பணம் பெறும் நிலையில் இருந்தேன் என்றும் அப்பா அம்மாதான் எல்லா பிள்ளைகளுக்கும் செய்யவேண்டியதை செய்தார் என்றால் இல்லை. எவ்வபோது எந்தெந்த தங்கைகளுக்கு திருமணம் நடந்தது என்னுடைய பங்களிப்பு என்ன என்றால் 1992இல் பிப்ரவரியில் தங்கை சகாயராணிக்கு நான் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்திலிருந்து அப்பா திருமணம் செய்து வைத்தார். 1999 இல் மற்றொரு சகோதரி

மேரிஸ்மெரிக்கோவுக்கு அப்பா ஒய்வு பெற்றிருந்த நிலையில் நான் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி திருமணம் நடந்தது. அப்படி வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதற்கு ஆவணம் வைத்துள்ளேனா என்றால் அந்த ஆவணங்களை சேர்த்து வைக்கவில்லை. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் 01.08.1990இல் மூன்று மாத அனுமதியுடன் சீல் உள்ளது என்றால் ஆமாம். 03.08.1990இல் சார்ஜா ஏர்போர்ட்டிலிருந்து வெளியானதாக உள்ளது என்றால் ஆமாம். நான் குறுகிய காலத்திற்கு சுற்றுலா பயணியாக போய்விட்டு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அங்கு வேலை பார்த்ததை காண்பிக்க எனக்கு கொடுக்கபட்ட ஒர்க் பர்மிட்டோ, அடையாள அட்டையோ என்னிடம் இல்லை என்றால் ஆமாம். அவ்வப்போது நான் குறுகிய காலத்திற்குதான் சுற்றுலா பயணியாக போய் வந்துள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. வெளிநாட்டில் நிரந்தர பணியில் இல்லை என்றும், சம்பாதிக்கவில்லை என்றும் வீட்டிற்கும் பணம் அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அம்மா வீடு கட்டி, கடை கட்டி வாடகைக்குவிட்டு வாடகை வசூலித்து வந்தார் என்றால் நான் அனுப்பிய பணத்தில்தான் கட்டியது நான் வரும் வரை அம்மா தான் வாடகை வாங்கினார். அந்த வீட்டில் தரைதளத்தில் நான் உள்ளேனா என்றால் ஆமாம், மாடியில் தம்பி அனுமதியின் பேரில் வசித்து வருகிறார். எத்தனை கடைகள் உள்ளது என்றால் நான்கு கடை. கடை வாடகையை நான் வந்த பிறகு நான்கு கடைக்கும் நான்தான் வாடகை வாங்குகிறேன். தம்பிக்கு வேலை இல்லாமல் இருந்ததால் கடை வாடகை வாங்கி நான்தான் பணம் கொடுப்பேன். தற்போது நேரடியாக அவரையே ஒரு கடை வாடகையை வாங்கி கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறேன். அம்மா எனக்கு வேலை இல்லாததால் ஒர கடையை கொடுத்து வாடகை வாங்கி கொள்ள சொன்னார் என்றும், அதேபோல் தம்பிக்கும் ஒரு கடையை கொடுத்து வாடகை வாங்கி கொள்ள சொன்னார் என்றும் சொன்னால் தவறு.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.